**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.37/2024**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw1/Pw1 |
| Name | : சுசிலா |
| Father/Husband's Name | : ராஜேந்திரன் |
| Village | : மதுராந்தகம் |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 58 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20.07.2026.

**முதல் விசாரணை:**

1. நான் இல்லத்தரசியாக இருக்கிறேன். நான் சத்திவேல் என்பவரிடம் இருந்து 18½ சென்ட் காலி நிலம் இரண்டு நம்பரில் வாங்கினேன். அதில் சர்வே எண்ணை தவறாக போட்டு ஏமாற்றி எனக்கு சொத்தை விற்றுவிட்டார். அந்த பத்திரத்தின் எண் 440/2004 ஆகும். ஐந்து ஆண்டுகள் பிறகு பட்டா வாங்குவதற்காக நான் தாசில்தார் அலுவலகத்திற்கு சென்ற போது அந்த சர்வே எண்ணிற்கு பட்டா வழங்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அந்த பத்திரத்தை வீட்டிற்கு கொண்டு வந்துவிட்டு சக்திவேலை தேட ஆரம்பித்தோம். நானும் எனது தம்பியும் சக்திவேல் இருக்கும் இடத்தை கண்டுபிடித்து சக்திவேல் இடம் சரியான சர்வே எண்ணை போட்டு நிலத்தை பதிவு செய்து கொடுக்குமாறு கேட்ட போது நான் யார் என்று தெரியாது என்றும், நான் அவ்வாறு சொத்தை எழுதி கொடுக்கவில்லை என்றும் சொன்னார்.

2. அதனால் நான் காஞ்சிபுரம் குற்றப்பிரிவு காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். போலீசார் சக்திவேலை அழைத்து விசாரித்தார்கள். என்னிடம் சொன்ன அதே சங்கதிகளை தான் சக்திவேல் சொன்னார். நான் நிலம் வாங்கும் போது சக்திவேலுக்கு ரூ.3,70,000/– ரொக்க பணமாக கொடுத்தேன். பத்திரத்தில் ரூ.60,000/– கிரையத் தொகையாக போடப்பட்டுள்ளது. ஏன் என்று கேட்ட போது அது எவ்வளவு தொகை வேண்டுமாலும் போட்டுக் கொள்ளலாம் என்று சொன்னார். அருகில் உள்ளவர்கள் பிரச்சனை செய்கிறார்கள் என்று கேட்ட போது உனக்கு நிலம் கொடுத்துவிட்டதால் நீதான் அந்த பிரச்சனையை பார்த்து கொள்ள வேண்டும் என்று சொல்லிவிட்டார். அந்த நிலம் கூட்டு பட்டாவாக இருந்தது. ஆஜர் எதிரிதான் அந்த சக்திவேல். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் **அதசா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கிரையப்பத்திரம் எண் 440/2004 சான்றிட்ட நகல் **அதசா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu